30.03.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### "விவசாயிகள் விதைப் பரிசோதனை செய்து விளைச்சலைப் பெருக்கலாம்'

விவசாயிகள், தனியார் விதை உற்பத்தியாளர்கள், விதை நிறுவனங்கள் தங்களது விதைகளை பரிசோதனை செய்து விளைச்சலைப் பெருக்கிக் கொள்ளலாம் என விதைப் பரிசோதனை அலுவலர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, விதைப் பரிசோதனை அலுவலர் வெங்கடாசலம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

நல்ல தரமான விதைகளை விதைப்பு செய்யாவிடில் விளைச்சல் குறைந்து விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தும். இதைத் தவிர்க்க, விவசாயிகள் தங்களது விதைகளைப் பரிசோதனை செய்து கொள்ளலாம். ஒரு விதை மாதிரியைப் பரிசோதனை செய்ய அரசு அதிகம் செலவிடுகிறது. ஆனால், விவசாயிகளின் நலன் கருதி ரூ. 30-க்கு விதைப் பரிசோதனை செய்யப்படுகிறது. எனவே, விவசாயிகள், தனியார் விதை உற்பத்தியாளர்கள், விதை நிறுவனங்கள், விதை விற்பனையாளர்கள் தங்களது விதைகளை பரிசோதனை செய்து தரமான விதைகளை விதைத்து விளைச்சலைப் பெருக்கிக் கொள்ளலாம்.

எனவே, தங்களிடம் உள்ள விதை மாதிரியுடன் பயிர், ரகம், குவியல் எண் ஆகியவற்றை முகப்புக் கடிதத்துடன் ஒரு மாதிரிக்கு ரூ. 30 வீதம் கட்டணத்துடன் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ விதைப் பரிசோதனை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், 1424/ ஏ தடாகம் சாலை, ஜி.சி.டி போஸ்ட், கோவை 6410013 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தால், விதை மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு அதன் முடிவுகள் விண்ணப்பதாரரின் முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### காபி செடிகளை காக்கும் பாக்கு மட்டைகள்

பந்தலுார்:பந்தலுார் அருகே, பாட்டவயல் பகுதியில் காபி செடிகள், காயாமல் இருக்க, பாக்கு மட்டைகளை கொண்டு மூடும் பணி நடந்து வருகிறது.

பந்தலுார் அருகே, பாட்டவயல் சுற்றுவட்டார பகுதிகளில், தேயிலைக்கு விலையில்லாத காரணத்தால், தேயிலை செடிகள் பறித்து அகற்றப்பட்டன.அதற்கு பதிலாக காபி செடிகள் நடவு செய்யப்பட்டு வருகின்றன. தற்போது, கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால், காபி செடிகள் காயாமல் பாதுகாக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சில இடங்களில் தண்ணீர் தெளிக்கும் பணி மேற்கொண்டாலும், போதிய தண்ணீர் இல்லாததால், இந்த முயற்சியும் முழுமையடையவில்லை. இதனால், காபி செடிகளை பாதுகாத்திட, பாக்கு மட்டைகளை கொண்டு மூடும் பணி நடந்து வருகிறது. விவசாயி ராஜா கூறுகையில்,"தற்போது எதிர்பார்த்தை விட, வெயிலான காலநிலை நிலவுவதால், காபி செடிகளை பாதுகாக்க, பாக்கு மட்டைகள் மிகவும் உதவியாக உள்ளன," என்றார்.

### குன்னூர் மலை பாதைகளில் 'ஜெகரண்டா' மலர்கள்

குன்னுார்:குன்னுார் பகுதிகளில் 'ஜெகரண்டா' மலர் அதிகளவில் காணப்படுகிறது.
குன்னுாரில் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில், கொண்டு வரப்பட்ட ஜெகரண்டா மலர் செடிகள், மலைப்பாதைகள், தேயிலை தோட்டங்கள், காட்டேஜ் பகுதிகளில் நடவு செய்யப்பட்டுள்ளது. கூட்டு இலைகளை கொண்டு வளரும் தன்மை கொண்ட இந்த வகை மரங்களில், கோடை

காலம் துவங்கும் போது இலைகள், முழுமையாக கீழே விழுந்து, மலர்கள் மட்டுமே பூத்து குலுங்கும்.

**பிளம்ஸ் பழங்கள் சீசன் துவங்கியது**

கொடைக்கானல்: கொடைக்கானலில் சுற்றுலா பயணிகள் அதிகமாக விரும்பும் பிளம்ஸ் பழ சீசன் துவங்கியுள்ளது.

கொடைக்கானல் வரும் சுற்றுலாபயணிகள் விரும்பி வாங்கி ருசிக்கும் பழங்களில் பிளம்ஸ் பழங்கள் பிரதான இடத்தை வகிக்கின்றன. செக்கச் சிவந்த இப்பழங்களை பார்த்ததும் எவருக்கும் சுவைக்கும் ஆவல் மேலிடும்.

இப்பழங்களைக் கொண்டு ஜாம், ஐஸ்கிரீம் போன்றவை தயாரிக்கப்படுகின்றன. ஆங்கிலேயர் காலத்தில் வளர்க்கப்பட்ட மரங்களின் எண்ணிக்கை தற்போது குறைந்துள்ளது.

வால்பேரி, கிரீன்கேஜ், ஊட்டிபேரி போன்ற மரங்கள் சுற்றுலா நகரில் காணாமல் போய்விட்டன. பிளம்ஸ் மரங்கள் மட்டும் தற்போது ஒரு சிலரது தோட்டங்களில் வைத்து வளர்க்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. இப்பழங்கள் ஏப்ரல் மற்றும் மேயில் பழச்சந்தையில் அதிகமாக விற்பனைக்காக வரும்.

மேலும் பிற மாநிலங்களுக்கும் பிளம்ஸ் பழங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றது. குழந்தைகள் முதல் பெரியவர் வரை இப்பழத்தை விரும்பி வாங்குகின்றனர்.

இப்பழங்கள் சீசனுக்கேற்றவாறு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. தற்போது அட்டுவம்பட்டி, பள்ளங்கி, கோம்பை, போன்ற இடங்களில் பிளம்ஸ் மரங்களின் காய்ப்பு துவங்கியுள்ளது. இதனால் நல்ல விலை கிடைக்கும் என விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தற்போது பழச்சந்தைகளில் கோடைகால பழங்கள் கிலோ 250, 300 , ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. வரத்து அதிகரித்தால் விலை குறையும் வாய்ப்புள்ளது.

## வேளாண் விற்பனை மையத்தில் 9,000 விவசாயிகளுக்கு பயிற்சி

உத்தமசோழபுரம்: உத்தமசோழபுரத்தில் உள்ள தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரிய பயிற்சி மையத்தில், 9 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

தமிழகத்தில், வேளாண் விற்பனை வாரியம் சார்பில், சேலம் உத்தமசோழபுரத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்குழு வளாகத்தில் மட்டும், மாநில அளவிலான பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில், ஒரு வேளாண் இணை இயக்குனர், மூன்று உதவி இயக்குனர்கள் பதவிகளை உருவாக்கி, விவசாயிகள், விற்பனைக்குழு அலுவலர்கள், விற்பனை விரிவாக்க அலுவலர்கள், விற்பனைக்குழு தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் என, பல தரப்பட்டவர்களுக்கு, 11 வித பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. விவசாயிகளுக்கு, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையில் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள், ஒழுங்குமுறை விற்பனைக்குழு பயன்பாடு, உழவர் சந்தை பயன்பாடு, நேரடி விற்பனை மையம், உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் அமைப்பது, குளிர்பதன கிடங்கு பயன்பாடு, உலர் சேமிப்பு கிடங்கு பயன்பாடு உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன. இந்த மையத்தில், 15 ஆண்டுகளில் விவசாயிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் என, 9,248 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சி அளித்த வகையில், 41.33 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

## விவசாயிகளின் தேவையே முக்கியம்: கே.வி.கே., ஒருங்கிணைப்பாளர்

நாமக்கல்: "விவசாயிகளின் தேவையை அறிந்து அவற்றை பூர்த்தி செய்வதில், வேளாண் அறிவியல் நிலையம் முக்கிய பங்கு வகிக்கிறது," என, அதன் ஒருங்கிணைப்பாளர் அகிலா கூறினார்.

இது குறித்து அவர் கூறியதாவது: விவசாயிகளின் தேவையை அறிந்து, அவற்றை பூர்த்தி செய்வதில், வேளாண் அறிவியல் நிலையம் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த நிலையத்தில், விவசாயிகளுக்கு பல்வேறு

வகையான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சின்போது, 30 நபர்களுக்கு மட்டுமே பயிற்சி அளிக்கப்படுவதற்கு காரணம், அவர்கள் முழுமையாக பயிற்சியை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே. மற்றபடி விவசாயிகளை புறக்கணிக்க வேண்டும் என்ற நோக்கம் அல்ல. தீவன புல் விதை, காய்கறி விதை, புல் கரணை ஆகியவை, இங்கு பயிற்சி எடுத்தவர்கள், உற்பத்தி செய்பவர்களிடம் இருந்து பெற்று வழங்கப்படுகிறது. இங்கு உட்பூசல் என்பது இல்லை. பேராசிரியர்களுக்கும் இருந்தால், விசாரித்து அவற்றை களைய நடவடிக்கை எடுக்கப்படும். பண்பலை வானொலி நிலையம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. தினமும் மாலை, 5 மணி முதல், இரவு, 7 மணி வரை ஒலிபரப்பப்படுகிறது. மறு ஒலிபரப்பு, பகல், 12 முதல், 2 மணி வரை. அதில் பொறுப்பாளர்களை நியமித்து, விவசாயம், கால்நடைத்துறை மட்டும் அல்லாமல், மற்றத்துறைகள், பொதுத்தகவல்களும் ஒலிபரப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது. அவை இன்னும் இரண்டு மாதங்களில் செயல்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**கோடையிலும் குளுகுளு தென்னை!**

தென்னை ஒரு நீண்டகால பயிர். இதன் நீர்த்தேவை அதிகம். தட்ப வெப்பநிலையை பொறுத்து இடத்திற்கு இடம் நீர்த்தேவை மாறுபடும். கோடை காலத்தில் அதிக வெப்பநிலையாலும், காற்றின் குறைந்த ஈரப்பதத்தாலும் மண்ணிலிருந்தும் பயிர்களிலிருந்தும் அதிகளவு நீர் ஆவியாகி வறட்சி ஏற்படும். சொட்டுநீர் பாசனமுறையில் நீர் பாய்ச்சினால் தென்னைக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 80 லிட்டர் நீர் தேவைப்படும். பாத்தி கட்டி நீர் பாய்ச்சினால் மரம் ஒன்றிற்கு வாரத்திற்கு 600- 800 லிட்டர் நீர் பாய்ச்ச வேண்டும். தண்ணீர் பற்றாக்குறையுள்ள

இடங்களில் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மகசூல் குறையும். **வறட்சியின் அறிகுறிகள்**: மரத்தில் முற்றிய அடிஓலைகளின் ஓரங்கள் மஞ்சள் நிறமாகி உதிர்ந்துவிடும். நடு மற்றும் நுனி இலைகள் வாடி

வதங்கி கீழ்நோக்கி தொங்கும். புதிய குருத்தோலைகள், புதிய பாளைகள் தோன்றுவது தாமதமாகும். பாளைகளில் பெண் பூக்களில் மகரந்தசேர்க்கை ஏற்படாமல் கருகி உதிர்ந்துவிடும். குரும்பைகள் அதிகமாக உதிரும்.

வறட்சியால் பாதிக்கப்படும் மரங்களின் நுனி சிறுத்து மரமே காய்ந்து விடும்.

**மேலாண்மை:** ஆண்டுதோறும் மரம் ஒன்றுக்கு 50 கிலோ தொழுஉரம் இடவேண்டும். பரிந்துரைக்கப்பட்ட இரண்டு கிலோ பொட்டாஷ் உரத்தில் பாதியை ஆடி மாதத்திலும் மீதியை தையிலும் மற்ற உரங்களோடு சேர்ந்து இடவேண்டும். இதிலுள்ள பொட்டாசியம் மற்றும் குளோரின் வறட்சியை தாங்க உதவுகின்றன.

மரம் ஒன்றுக்கு 100 கிலோ கரம்பை அல்லது வண்டல் மண் இடலாம். நீர் பற்றாக்குறை அதிகமாகும் போது 3 அல்லது 5 அடி மட்டைகளை அகற்றிவிடலாம். கோடையில்

தென்னந்தோப்பில் உழவு செய்வதை தவிர்க்கலாம்.

பருவமழைக்கு முன்பாக மரத்தை சுற்றி ஆறடி அளவிற்கு 100 கிராம் சணப்பு விதைகளை விதைத்து பூப்பதற்கு முன்பாக மடக்கி கொத்திவிட வேண்டும்.

காய்ந்த 15 - 20 தென்னை மட்டைகளை மரத்தை சுற்றி வைத்து மண்போர்வை அமைக்கலாம். தென்னை மரத்தை சுற்றி ஆறடி விட்டத்திற்குள் வட்டபாத்தி அமைத்து அதில் 100 உரிமட்டைகளை புதைக்கலாம். இவை ஒவ்வொன்றும் அதன் எடையை போல ஆறு மடங்கு நீரை தேக்கி வைக்கும் தன்மை கொண்டவை.

கோடையில் மரத்தை சுற்றி 2 - 3 மீட்டர் உயரத்திற்கு சுண்ணாம்பு பூசலாம். இம்முறைகளை ஒருங்கிணைத்து மேற்கொண்டால் கோடை வெப்பத்தில் இருந்து தென்னை மரங்களை பாதுகாக்கலாம்.

**-பேராசிரியர் கொ.பாலகிருஷ்ணன், பயிர்வினையியல் துறை, விவசாய கல்லூரி, மதுரை**

# வெள்ளரியில் வெள்ளந்தி வருமானம்



வீரிய ஒட்டுரக வெள்ளரி விதை நடவு செய்து இஸ்ரேல் தொழில்நுட்பத்தில்
'பாலிஹவுஸ்' குடில் அமைத்து மகரந்த சேர்க்கை இல்லாமல் 32வது நாளில் இருந்து மகசூல் ஈட்டுகின்றார், பெரியகுளம் விவசாயி ஷியாம்லால்.

தேனி மாவட்டம் பெரிய குளத்தில் 3 ஏக்கரில் மா சாகுபடி செய்துள்ள இவர், தோப்பில் காலியாக இருந்த 27 சென்ட் இடத்தில் வெள்ளரி விதைத்து சொட்டுநீர் பாசன முறையில் தேவைக்கு ஏற்ப உரம், மருந்து பயன்படுத்துகிறார். சாகுபடி பக்குவம் குறித்து அவர் கூறியது: அடியுரமாக இயற்கை உரம் இட்டதால் வெள்ளரி கரும்பச்சை நிறத்தில் காய் ஒன்று 200 கிராம் முதல் 250 கிராம் எடையில் காய்க்கிறது. வெள்ளரி கொடி மேல்நோக்கி 10 அடி உயரம் சென்ற பின், அதனை திரும்ப தரைநோக்கி வளர விடுகிறோம். ஓரடி நீளத்தில் காய்கள் கிடைக்கின்றன. தினமும் 5 முதல் 10 பெட்டிகளும் சீசனில் 20 பெட்டிகள் வரை வெள்ளரி கிடைக்கிறது. ஒரு பெட்டி 25 கிலோ எடை கொண்டது. தற்போது மார்க்கெட்டில் குறைந்த பட்ச விலை கிலோ ரூ.20க்கு போகிறது. இஸ்ரேல் தொழில்நுட்பத்தில் ரூ.15 லட்சம் செலவில் 'பாலி ஹவுஸ்' அமைத்துள்ளேன். தேசிய தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் ரூ.4.67 லட்சம் மானியம் கிடைத்தது. 120 நாட்களில் குறைந்தது 13 டன் மகசூல் பெறலாம். ஒரு டன் ரூ. 25 ஆயிரம் வீதம்

ரூ.3.25 லட்சம் வருவாய் கிடைத்தது. ஆண்டுக்கு மூன்று முறை சாகுபடி செய்யலாம். நாள் ஒன்றுக்கு குறைந்தது ரூ.2,500 வருவாய் கிடைக்கிறது. உரம், தண்ணீர், மருந்து, பராமரிப்பு என ரூ.500 ஆகும். கோடை சீசனில் தேவை அதிகரிக்கும் போது கிலோ ரூ.35 வரை விலை உயரும். அதிகபட்ச மகசூல் 16 டன் வரை எடுக்கலாம். வெள்ளரிக்கு பெங்களூருவில் நல்ல வரவேற்பு உள்ளது. காய் சென்றவுடன் பணம் கைக்கு வந்துவிடும். துபாய்க்கு வெள்ளரி அனுப்ப ஆர்டர் பெற்றுள்ளேன். அங்கு கிலோ ரூ.90க்கு விற்பனையாகிறது. அனுப்பும் செலவு போக கிலோவிற்கு ரூ.30 மிஞ்சும். விமானத்தில் தினமும் 500 கிலோ அனுப்ப தயாராகி வருகிறோம்.

இந்த குடில் 20 ஆண்டுகளுக்கு பயன்தரும். ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மேற்கூரை மட்டும் மாற்றலாம்.," என்றார். இவரிடம் பேச 77080 61977

**- பி.ரவி, தேனி**

## வாடுது வதங்குது வாழை!



தமிழகத்தில் தேனி,திருச்சியில் அதிகளவில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. வாழை இலையை அதிகபூச்சிகள் தாக்குவது இல்லை. தற்போது வாழையில் 'ஸ்கிப்பர்' எனப்படும் இலை சுருட்டுப் புழுவின் தாக்குதல் அதிகமாக உள்ளது. இலைக்காக விவசாயம் செய்யும்

விவசாயிகள் மிகுந்த பிரச்னையை சந்திக்கின்றனர். இப்பூச்சி ஆப்ரிக்காவில் இருந்து ஊடுருவியது.

இந்த அந்து பூச்சியானது வாழையிலையின் பின்புற நுனிப்பகுதியில் குவியலாக முட்டைகளை இடுகிறது. முட்டைகள் ஆரம்பநிலையில் இளஞ்சிவப்பு நிறமாக உள்ளது. முட்டையிலிருந்து வெளிவரும் முதல் நிலை புழுக்கள் இலையினை சிறியதாக சுருட்டி உண்கிறது. இலைச்சுருள் உள்கூட்டுப் புழுவாக மாறுகிறது. புழுவில் இருந்து வரும் அந்துப்பூச்சியின் இறக்கை பழுப்பு நிறத்தில் மஞ்சள்நிற புள்ளியுடன் காணப்படும்.

நன்கு வளர்ந்த புழுக்கள் வெள்ளை நிறத்தில் காணப்படும். பூச்சிகள் பகலில் வாழையிலையின் சருகுகளில் அமர்ந்திருக்கும். புழுக்களை சேகரித்து அழிக்க வேண்டும். காக்கைகள் இப்புழுக்களை விரும்பி உண்பதால் அவற்றுக்கு உணவு வைப்பதன் மூலம் காக்கை நடமாட்டத்தை அதிகரிக்கலாம்.

பறவைகள் தங்கும் குடில்களை அமைத்து புழு, பூச்சி எண்ணிக்கையை கட்டுப்படுத்தலாம்.


ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் பேசில்லஸ் துரின்ஜியன்ஸ் பாக்டீரியாவை கலந்து தெளித்து புழுக்களை கட்டுப்படுத்தலாம். லிட்டருக்கு 3 சதவீத வேப்ப எண்ணெய் அல்லது 5 சதவீத வேப்பங்கொட்டை சாறு கலந்து தெளிக்கலாம்.

**- சி.சுரேஷ், பூச்சியியல் துறை உதவி பேராசிரியர், விவசாய கல்லரி, மதுரை.**

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## நதிகள் இணைப்பில் ஆந்திரா முதலிடம் : சந்திரபாபு நாயுடு பெருமிதம்



ஐதராபாத் : நதிகள் இணைப்பில் ஆந்திரா முதலிடம் வகிப்பதாக அம்மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு பெருமிதம் தெரிவித்துள்ளார். இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகளை இணைக்ககன் மூலம் நதிகள் இணைப்பில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக ஆந்திரா திகழ்வதாக பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார். பட்டீசம் திட்டத்திற்காக கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகள் இணைக்கப்பட்டுள்ளதாகவும் சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார். பட்டீசம் திட்டம் வரும் ஓராண்டிற்குள் நிறைவடையும் எனவும் கூறியுள்ளார்.

## தர்மபுரி மாவட்டத்திலிருந்து சீனா, ஐரோப்பாவுக்கு ஏற்றுமதியாகும் கயிறு ஆண்டுக்கு ரூ.10 கோடி வரை வர்த்தகம்




தர்மபுரி : தர்மபுரி மாவட்டத்தில் தயாரிக்கப்படும் தேங்காய் நார் கயிறு மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் சீனா, ஐரோப்பிய உள்ளிட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதன்மூலம் ஆண்டுக்கு ரூ.10 கோடி வரை வர்த்தகம் நடக்கிறது. தமிழகத்தில் தேங்காய் நார் கயிறு தயாரிப்பில் கோவை மாவட்டம் பொள்ளாச்சி முதலிடத்தில் உள்ளது. திண்டுக்கல், திருநெல்வேலி, பட்டுக்கோட்டை, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் அதிகளவில் கயிறு தயாரிக்கப்படுகிறது. இதில் தர்மபுரி மாவட்டம் நான்காவது இடத்தில் உள்ளது. தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 40 ஆயிரம் ஏக்கருக்கு மேல் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தேங்காய் மட்டையில் நார் பிரித்தெடுத்தல், நாரிலிருந்து கயிறு தயாரித்தல், முறுக்கேற்றப்பட்ட கயிறு, மெத்தைக்கான விரிப்புகள், மிதியடிகள் தயாரிக்கப்படுகிறது. தர்மபுரி மாவட்டம் காரிமங்கலம் டவுன், அனுமந்தபுரம், கெரகோடஅள்ளி, கள்ளம்பட்டி, மண்ணாடிப்பட்டி, பாளையம்புதூர் பகுதிகளில் தயாரிக்கப்படும் கயிறு, மெத்தைக்கான விரிப்புகள், மிதியடிகள் மற்றும்

மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்கள், சீனா, ஐரோப்பியா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மேலும், பீகார், ெகால்கத்தா, பெங்களூர், மகாராஷ்டிரா, ஐதராபாத் ஆகிய நகரங்களுக்கும் விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. காரிமங்கலம், பாலக்கோடு ஒன்றியங்களில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பத்தினர், இதை சிறுதொழிலாக செய்து வருகின்றனர். சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் 200க்கும் மேற்பட்டவை இயங்குகின்றன. தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆண்டுக்கு சுமார் ரூ.10 கோடி வரை கயிறு வர்த்தகம் நடந்து வருகிறது. இதுகுறித்து தென்னை நார் தொழிற்சங்க நிர்வாகிகள் கூறியது: 'தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்பெண்ணை ஆற்றங்கரையோரம் தென்னை மரங்கள் அதிகமுள்ளன. அதிலிருந்து கிடைக்கும் தேங்காய் மட்டையில் நார் எடுத்து, கயிறு தயாரிக்கப்படுகிறது. 35 கிலோ எடையுள்ள ஒரு பண்டல் தேங்காய் நார் ரூ.490 லிருந்து ரூ.525 வரை விற்பனை செய்யப்படுகிறது. இந்த நாரிலிருந்து கயிறு திரித்து கட்டுமான பணிகளுக்கு விற்பனை செய்கிறோம். 30 கிலோ கொண்ட ஒரு பண்டல் ரூ.810 முதல் ரூ.1100 வரைக்கும் விற்பனை செய்கிறோம். மாவட்டத்தில் ஆண்டுக்கு சுமார் ரூ.10 கோடி வரை கயிறு மற்றும் பொருட்கள் வர்த்தகம் நடக்கிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## குறைந்த தண்ணீரில் அதிக லாபம் பருத்தி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

திருவிடைமருதூர், : திருவிடைமருதூர் பகுதியில் குறைந்த தண்ணீரில் அதிக லாபம் தரும் பருத்தி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வமாக ஈடுபட்டு வருகின்றனர். இதனால் டீசலுக்கு மானியம் வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர் மற்றும் திருப்பனந்தாள், கும்பகோணம், பாபநாசம் உள்ளிட்ட ஒன்றிய பகுதிகளுக்கு உட்பட்ட கிராம பகுதிகளில் மின்மோட்டாரை கொண்டு மூன்றாம் போகமாக

விவசாயிகள் நெல் சாகுபடி செய்து வந்தனர். கடந்த சில ஆண்டுகளாக மின்வெட்டு ஏற்பட்டு வருவதால் போதிய பாசன நீர் கிடைக்காமல் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் கடந்த காலங்களில் காய்ந்ததை அடுத்து மாற்றுப்பயிராக குறைந்த தண்ணீரை கொண்டு சாகுபடி செய்யக்கூடிய பருத்தியை 8,000 ஏக்கரில் பயிரிட்டு வருகின்றனர்.

அதிக பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ள திருவிடைமருதூர் அடுத்த ஏணநல்லூர் விவசாயிகள் கூறும்போது, கடந்த காலங்களில் கோடையில் விவசாய மின்மோட்டாரை நம்பி நெற்பயிரை பயிரிட்டோம். ஆனால் கடும் மின்வெட்டு ஏற்பட்டு போதிய பாசனநீர் கிடைக்காததால் நெற்பயிர்கள் காய்ந்து பதராகி நஷ்டம் ஏற்பட்டது. இதனால் சில ஆண்டுகளாக குறைந்த தண்ணீரை கொண்டு பயிர் செய்யக்கூடிய 6 மாத பயிரான பருத்தியை சாகுபடி செய்து வருகிறோம் என்றனர்.

இதுகுறித்து விவசாயி மனோகர் கூறுகையில், ஒரு ஏக்கர் பருத்தி சாகுபடியில் விதை விதைத்தல், செடிகளை வெட்டுதல், தண்ணீர் பாய்ச்சுதல், உரமிடுதல், பூச்சி மருந்து தெளித்தல் என பல்வேறு பராமரிப்பு செலவு செய்வதற்கு ரூ.25,000 முதல் ரூ.30,000 வரை செலவாகிறது. 15 முதல் 18 குவிண்டால் வரை அறுவடையில் பருத்தி பஞ்சு கிடைப்பதால் ரூ.70 ஆயிரம் வரை வருமானம் கிடைக்கும்.

இதில் செலவுகள் போக ரூ.40 ஆயிரம் மிச்சம் ஏற்படுகிறது. மற்ற பயிர்களைவிட பருத்தியில் கூடுதலான லாபம் கிடைப்பதால் தற்போது என்னை போன்ற விவசாயிகள் ஆர்வத்துடன் சாகுபடி செய்து வருகின்றனர். குறைந்த அளவில் தண்ணீர் போதும் என்ற நிலையிலும் இதற்கே தற்போது போதிய மின்சாரம் கிடைப்பதில்லை. அதுபோன்ற நேரங்களில் வாடகைக்கு இன்ஜினை எடுத்து டீசல் மூலம் தண்ணீர் பாய்ச்சுவதால் கூடுதல் செலவாகிறது. குறைந்து வரும் விவசாயத்தை காப்பாற்ற தமிழ அரசு டீசலுக்கான மானியத்தை வழங்க வேண்டும் என்றார்.

**மேற்கு தொடர்ச்சி மலையில் மழை கோடை நெல் சாகுபடிக்கு தயாராகும் விவசாயிகள்**

தேவதானப்பட்டி, : பெரியகுளம் அருகே உள்ள மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் நேற்று முன்தினம் இரவு பெய்த மழையால் கோடை நெல் சாகுபடிக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர். பெரியகுளம் மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்யும் மழைநீர் வராக நதிமூலம் வடுகபட்டி, மேல்மங்கலம், ஜெயமங்கலம், குள்ளப்புரம், வழியாக சென்று வைகை ஆற்றில் கலக்கிறது. வராகநதி ஆற்றுப்பாசனம் மூலம் வடுகபட்டி, மேல்மங்கலம், ஜெயமங்கலம் பகுதியில் சுமார் 3500 ஏக்கர் நெல் சாகுபடி பரப்பளவு பயனடைந்து வருகிறது. நடப்பாண்டில் பருவமழை நல்லமுறையில் பெய்ததால் முதல்போக சாகுபடி அறுவடை முடிந்தது. பின்னர் இரண்டம் போக சாகுபடிக்காக விவசாயிகள் வயல்களை உழுது பக்குவப்படுத்தி வைத்திருந்தனர். பங்குனி மாதம் கோடை மழை பெய்யும், பெய்தவுடன் இரண்டாம் போக நெல் சாகுபடியை தொடங்க விவசாயிகள் தயாராக இருந்தனர். ஆனால் இந்த மாதம் வெயில் கடுமையாக வாட்டியெடுக்க நிலையில், நேற்று முன்தினம் மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் இரவு பலத்த மழை பெய்தது. இதனால் வராகநதியில் தண்ணீர் வரத்தொடங்கியது. பின்னர் வராக நதியில் வரும் தண்ணீரை விவசாயிகள் ராஜவாய்க்கால் மூலம் விவசாய நிலங்களுக்கு விவசாயிகள் கொண்டு செல்கின்றனர். தற்போது கிணற்றுப் பாசனம் உள்ள விவசாயிகள் வாய்க்காலை பயன்படுத்தி இரண்டாம் போக சாகுபடிக்கு வயல்களை உழுது வருகின்றனர். மேலும் கோடை மழை பெய்யும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

## திசு வளர்ப்பு முறையில் அரியவகை மூலிகை செடிகள் உற்பத்தி



காரைக்குடி,

அழகப்பா பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்பவியல் துறை பேராசிரியர்கள், மாணவர் இணைந்து திசுவளர்ப்பு முறையில் அரியவகை மூலிகை செடியான கரிம்குறிஞ்சி செடிகளை உற்பத்தி செய்து வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

அரியவகை மூலிகை

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரி தொழில்நுட்பவியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் ரமேஷ், துறைத் தலைவர் கருத்தப்பாண்டியன், ஆராய்ச்சி மாணவர் ரமேஷ்குமார் ஆகியோர் அடங்கிய குழுவினர் கடந்த 3 ஆண்டுகளாக மேற்கு தொடர்ச்சி மலைகளில் உள்ள கரிம்குறிஞ்சி என்ற அரியவகை மூலிகை செடி குறித்து

ஆய்வு நடத்தி வருகின்றனர். இந்த கரிம்குறிஞ்சி மூலிகையானது பல்வேறு மருத்துவ குணங்கள் வாய்ந்தது. குறிப்பாக மூட்டுவலி, ஆஸ்துமா, தோல் வியாதிகள், தீக் காயங்கள், ஒவ்வாமையை தடுக்க இது பயன்படுத்தப்படுகிறது.

இந்த கரிம்குறிஞ்சி செடியில் அதிக அளவு பெட்டுலின், ஸ்டிக்மாஸ்டீரால், டேக்ஸ்சரால் போன்ற மருத்துவ வேதிப்பொருட்கள் காணப்படுவதால் சித்தமருத்துவர்கள், ஆயுர்வேத பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்களால் அதிக அளவில் எடுக்கப்பட்டு தற்போது இந்த மூலிகை செடியினமே அழியும் நிலையில் உள்ளது. இதுகுறித்து சர்வதேச இயற்கை பாதுகாப்பு கூட்டமைப்பு இந்த தாவரம் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது, அழிந்து வரும் இந்த தாவரத்தை சிறப்பு கவனம் செலுத்தி பாதுகாக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

<u>திசு வளர்ப்பு முறை</u>

இந்தநிலையில் அழகப்பா பல்கலைக்கழக உயிரி தொழில் நுட்பவியல் துறைத்தலைவர், இணைப் பேராசிரியர், ஆராய்ச்சி மாணவர் ஆகியோர் இணைந்து இந்த கரிம்குறிஞ்சி செடியினை திசு வளர்ப்பு முறையில் வளர்ப்பது குறித்து ஒரு ஆய்வுக் கட்டுரையினை இந்திய அறிவியல் மற்றும் மத்திய அரசின் தொழில்நுட்பக் கழகத்திற்கு அனுப்பி வைத்தனர். இந்த ஆய்வுத்திட்டம் இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கழகத்தினரால் அங்கீகரிக்கப்பட்டு இந்த திட்டத்திற்காக ரூ.15.28 லட்சம் நிதி உதவி வழங்கப்பட்டது.

அதன்படி இந்த நிதியினைப் பயன்படுத்தி திசு வளர்ப்பு முறையில் சுமார் 1000 கரிம்குறிஞ்சி செடிகள் தற்போது உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மருத்துவ குணம் வாய்ந்த இந்த மூலிகை செடிகளை வனத்துறையினரிடம் வழங்கும் நிகழ்ச்சி காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடந்தது. இந்த நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய பல்கலைக்கழக துணைவேந்தர் சுப்பையா, வனத்துறை மண்டல மேலாளர் அசோகன், வனத்துறை அதிகாரி தியாகராஜன் ஆகியோரிடம் திசு வளர்ப்பு முறையில் உற்பத்தி செய்யப்பட்ட 1000 கரிம்குறிஞ்சி செடிகளை வழங்கினார்.

இந்த செடிகள் உடனடியாக காரைக்குடியில் இருந்து ஊட்டிக்கு கொண்டு செல்லப்பட்டன. அங்கு வனப்பகுதியில் இந்த செடிகளை பயிரிட்டு பராமரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக வனத்துறையினர் தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் பல்கலைக்கழக பதிவாளர் (பொறுப்பு) முனைவர் பாலச்சந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## மணப்பாறை அருகே சுட்டெரிக்கும் வெயிலிலும் பூத்துக்குலுங்கும் வண்ண மலர்கள்



மணப்பாறை அருகே சுட்டெரிக்கும் வெயிலினால் மரங்கள் காய்ந்து வரும் நிலையில் இந்த வறட்சியையும் தாங்கி வண்ண வண்ண மலர்கள் பூத்துக்குலுங்குவது காண்போரை மகிழ்ச்சியடையச் செய்துள்ளது.

சுட்டெரிக்கும்வெயில்

தமிழகத்தில் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் தான் வெயிலின் தாக்கம் அதிக அளவில் இருக்கும். கோடை காலமான இக்காலத்தில் வெயில் சுட்டெரிக்கும். அதில் குறிப்பாக தமிழ் மாதமான சித்திரையில் வரும் கத்திரி வெயிலான அக்னி நட்சத்திர காலத்தில் வெயில் மக்களை வாட்டி வதைத்துவிடும்.

ஆனால் இந்த ஆண்டு தற்போதே அக்னி நட்சத்திர வெயிலைப் போன்று

வெயிலின் தாக்கம் அதிக அளவில் உள்ளது. மேலும் பெரும்பாலான நீர்நிலைகள், ஆழ்குழாய் கிணறுகளிலும் தண்ணீர் இல்லாத நிலையில், பல பகுதிகள் பசுமையின்றி வறட்சியாக காட்சி அளிக்கின்றது.

இதுமட்டுமின்றி தற்போதே இப்படி வெயில் சுட்டெரிப்பதால், அக்னி நட்சத்திர காலத்தில் எந்த அளவில் வெயில் தகிக்குமோ என்ற அச்சம் பொது மக்களிடம் ஏற்பட்டு உள்ளது. மேலும் வெயிலின் தாக்கத்தில் இருந்து தங்களை பாதுகாத்து கொள்ள பலரும் சாலையோர கடைகளில் தர்பூசணி, வெள்ளரி, இளநீர் போன்றவைகளை வாங்கி சாப்பிட்டு வருவதை காண முடிகிறது.

வண்ண மலர்கள்

தற்போது சுட்டெரிக்கும் வெயிலினால் மரங்கள் அதிக அளவில் காய்ந்து, இலைகள் இன்றி வெறும் கிளைகளாக காட்சி தருகின்றன. இந்நிலையில் திருச்சி மாவட்டம், மணப்பாறையை அடுத்த வையம்பட்டி அருகே உள்ள பொன்னணியாறு அணை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் பல இடங்களிலும் வண்ண, வண்ண மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன.

மஞ்சள் நிற பூ, சிவப்பு மற்றும் இளஞ்சிவப்பு நிறத்தில் உள்ள காகிதப் பூ ஆகியவை பூத்துக்குலுங்கி அழகாக காட்சியளிக்கின்றன.

மேலும் மஞ்சள் நிறத்தில் உள்ள பூவில் இருந்து வரும் வாசனை அந்த பகுதியை கடந்து செல்வோரை அப்படியே நிற்க வைக்கும் வகையில் உள்ளது.

வெயிலில் அலைந்து விட்டு வருபவர்கள் இந்த மலர்கள் உள்ள பகுதிகளுக்கு சென்றதும் தாங்கள் வெயிலில் சென்றதையே மறந்து விடும் அளவு அந்த பூக்களின் வாசனை உள்ளது. இந்த வறட்சியிலும் கண்ணுக்கு விருந்தாக காட்சியளிக்கும் இந்த பூக்களை கண்டு மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்து செல்கின்றனர். வையம்பட்டி பகுதியில் பல இடங்களிலும் இதே போன்ற மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன.

## விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு நெல் வரத்து அதிகரிப்பு



விழுப்புரம்

விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு நெல் வரத்து அதிகரித்துள்ளது. நேற்று ஒரே நாளில் ரூ.45 லட்சத்திற்கு விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

நெல் வரத்து அதிகரிப்பு

விழுப்புரத்தில் புதுச்சேரி சாலையில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் உள்ளது. இங்கு கோலியனூர், காணை, பெரும்பாக்கம், தோகைப்பாடி, பில்லூர், பிடாகம், கண்டமானடி, கண்டம்பாக்கம், வளவனூர் உள்ளிட்ட 300-க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து விவசாயிகள் தங்கள் விளை நிலங்களில் பயிர் செய்த நெல், உளுந்து, மணிலா, காராமணி, பச்சைப்பயிறு உள்ளிட்ட விளைபொருட்களையும் மற்றும் பருத்தியையும் மூட்டைகளாக கட்டிக்கொண்டு மாட்டு வண்டிகள், டிராக்டர்கள், மினி லாரி, லாரிகள் உள்ளிட்ட வாகனங்களில் ஏற்றிக்கொண்டு விற்பனைக்காக கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் 3,500 நெல் மூட்டைகள் விற்பனைக்காக வந்த நிலையில் இதை காட்டிலும் நேற்று அதிகமாக மொத்தம் 5 ஆயிரம் நெல் மூட்டைகள் வரத்து வந்தது. ஏ.டி.டி. 37 ரக நெல் 75 கிலோ எடை கொண்ட மூட்டை ஒன்று ரூ.750 முதல் ரூ.880 வரையும், ஐ.ஆர். 50 ரக நெல் மூட்டை ஒன்று ரூ.1,200 முதல் ரூ.1,300 வரையும், பொன்னி ரக நெல் ரூ.1,400 முதல் ரூ.1,500 வரையும் விற்பனை செய்யப்பட்டன. நெல்லுக்கு எதிர்பார்த்த விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

ரூ.45 லட்சத்திற்கு விற்பனை

இதேபோல் 300 மூட்டை பருத்தியும், 200 மூட்டை காராமணியும், 500 மூட்டை உளுந்தும், இதுதவிர பச்சைப்பயிறு, கம்பு, ராகி, எள் மூட்டைகளும் விற்பனைக்கு வந்தன. இதில் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4,700 முதல் ரூ.4,800 வரையும், 100 கிலோ எடை கொண்ட காராமணி மூட்டை ஒன்று ரூ.9,600 முதல் ரூ.9,700 வரையும், உளுந்து ரூ.9,700 முதல் ரூ.9,800 வரையும், பச்சைப்பயிறு ரூ.8,500 முதல் ரூ.8,600 வரையும், கம்பு ரூ.2,500 முதல் ரூ.2,650 வரையும், எள் ரூ.4,500 முதல் ரூ.5,200 வரையும், ராகி ரூ.2,500 முதல் ரூ.2,700 வரையும் விற்பனை செய்யப்பட்டன. நேற்று ஒரே நாளில் மட்டும் விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.45 லட்சத்திற்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.